5. ஒழுங்குப் பிரச்சினை

பேரவை நடவடிக்கைகளை ஒளிபரப்புவது

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

***திரு. துரைமுருகன்:** Point of order, Sir. பேரவைத் தலைவர் அவர்களே, ஓர் ஒழுங்குப் பிரச்சினையைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டுவருகிறேன். என்னுடைய ஒழுங்குப் பிரச்சினை அரசு சார்புடையது அல்ல. பேரவைத் தலைவராக வீற்றிருக்கின்ற தங்களுடைய ஆளுகைக்குட்பட்ட ஒன்றாகும். இந்த மன்றத்தில் நான் ஏற்கெனவே அதுகுறித்து ஒருமுறை பேசியிருக்கிறேன். இந்த மன்றத்தினுடைய நடவடிக்கைகளை இங்கே இருக்கின்ற பல தொலைக்காட்சிகள் கேமிராக்கள் மூலமாகப் படம் எடுக்கிறார்கள். அதை யார் தணிக்கை செய்கிறார்கள், யார் அதை எடிட் செய்கிறார்கள், யார் எடுக்கிறார்கள் என்று கேட்டேன். தமிழக அரசுக்குச் சொந்தமான Films Division-ல் படம் எடுக்கிறார்கள்; அவர்கள்தான் எடிட் செய்கிறார்கள்; மற்ற தொலைக்காட்சிகளுக்கு அதைத் தருகிறார்கள் என்று சொன்னார்கள். நான் அப்பொழுதே சொன்னேன். அரசாங்கத்தின் சார்பிலே எடுக்கின்ற தொலைக்காட்சி படத்திலே எதிர்க்கட்சியாகிய எங்களுக்கும் உரிய பங்கு இருக்குமா என்று கேட்டேன். இருக்கும் என்றுதான் அன்றைக்குச் சொன்னார்கள். ஆனால் தொடர்ந்து நான் பார்த்து வருகிறேன், எங்களுடைய கட்சிக்கு உரிய பங்கு இல்லாமல் முக்கியமான பல செய்திகளை இருட்டடிப்பு செய்திருக்கிறார்கள். இவை ஒவ்வொன்றிற்கும் ஆதாரம் இருக்கிறது. 'Tape'—ஐப் பார்த்து எழுதியிருக்கிறேன். நான் அவற்றை விளக்கமாக இங்கே சொல்ல விரும்பவில்லை. ஆனால், நாங்கள் சொல்கிற முக்கியமான கருத்துகள் அந்தத் தொலைக்காட்சியிலே காட்டப்படுவதில்லை. மாறாக, ஆளுங்கட்சியில் அமைச்சர்கள் சொல்வது, அவர்களுக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்துக் காட்டுகிறார்கள். உதாரணத்திற்கு நேற்றைக்குக்கூட, நான் ஒன்று சொல்கிறேன். கிருஷ்ணா தண்ணீரைப் பற்றி மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் சொல்கிறபோது—

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒழுங்குப் பிரச்சினையை நீங்கள் கொண்டுவந்திருக்கிறீர்கள். ஆளுங்கட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது, எதிர்க்கட்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதில்லை என்று சொல்கிறீர்கள், இதுபற்றி விளக்கமாக எந்தெந்தக் காட்சிகள் அப்படி வந்திருக்கின்றன என்பதை நீங்கள் எழுதி அனுப்புங்கள். அதுபற்றி நான், பரிசீலிக்கிறேன். அவைபற்றி என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, எடுக்கிறேன்.

2001 ஆகஸ்ட் 27]

திரு. துரைமுருகன்: அதைத்தான் நான் சொல்கிறேன். தங்களுடைய கவனத்திற்கு நான் எழுதித் தருகிறேன். இரண்டாவது, எங்களை இருட்டடிப்பு செய்வது மட்டுமல்ல, அதிலே தவறுகளையும் செய்கிறார்கள்.

முற்பகல் 11–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஒழுங்குப் பிரச்சினை என்று சொல்லிவிட்டீர்கள். அதுபற்றிய விளக்கங்களை நீங்கள் எழுதியனுப்புங்கள். அதுபற்றி நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லிவிட்டேன். இதற்குப் பிறகும், இருட்டடிப்பு, கண்துடைப்பு, இவைகளெல்லாம் வேண்டாம். நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள். எந்தெந்தக் காட்சிகள் அப்படி வந்துள்ளன என்பதைப்பற்றி விளக்கமாக நீங்கள் எழுதி அனுப்புங்கள். அதைப்பற்றி நான் பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்கிறேன்.

திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய உறுதிமொழியை ஏற்று, நான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பியதைத் தங்களுக்கு எழுத்து மூலமாகத் தருகிறேன். நியாயம் வழங்குவீர்கள் என்ற உறுதியோடு இப்போது அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மிக்க நன்றி.

6. அறிவிப்புகள்

(அ) சட்டப்படியான அமைப்புகளுக்கு உறுப்பினர்கள் தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. கீழ்க்காணும் பல்கலைக்கழக ஆட்சிமன்றப் பேரவை, ஆட்சிக் குழு உறுப்பினர்களாக மூன்று வருட காலத்திற்கு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பெற வேண்டும் என்று அப்பல்கலைக்கழகங்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன

செனட் எண்ணிக்கை: சென்னை பல்கலைக்கழகம் 6, மதுரை காமராசர் பல்கலைக்கழகம் 4, அண்ணாமலைப் பல்கலைக்கழகம் 3, டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகம் 2, பாரதியார் பல்கலைக்கழகம் 2, பாரதிதாசன் பல்கலைக்கழகம் 2, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் 2, தமிழ்ப் பல்கலைக்கழகம் 2, பெரியார் பல்கலைக்கழகம் 2, அழகப்பா பல்கலைக்கழகம் 1. அண்ணா பல்கலைக்கழகம் சிண்டிகேட் 1.